
# மார்பக புற்றுநோய் கட்டி அறிகுறி இப்படிதான் இருக்குமாம்.... எச்சரிக்கும் நிபுணர்!

Authored By தனலட்சுமி | Samayam Tamil | Updated: 31 Oct 2023, 2:21 pm

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் முழுவதும் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாக கொண்டாடப்படுகிறது. மார்பக புற்றுநோய் குறித்து பல கட்டுரைகளை பார்த்து...

## உங்களுக்கானவை



Infinity Learn நிறுவனம் EdTech துறையில் புதிய சாதனை! ஒரே வருடத்தில் 100 கோடி...



அதிகம் விற்பனையாகும் டிவிகளில் 65% வரை தள்ளுபடி- பெரிய திரைகள் அதிக...



மார்பக புற்றுநோய் கட்டி அறிகுறி இப்படிதான் இருக்குமாம்.... எச்சரிக்கும் நிபுணர்!

மார்பக புற்றுநோய் என்பது மார்பக செல்கள் மாற்றமடைந்து புற்றுநோய் செல்களாக பெருகி கட்டிகளை உருவாக்கும் நிலை. பெண்களிடம் பொதுவாக பார்க்க கூடிய புற்றுநோயான இது ஆண்களிடம் பார்க்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது. மார்பக புற்றுநோய் கட்டிகள் அகற்ற அறுவை சிகிச்சை செய்யப்படும் நிலையில் மார்பில் கட்டிகள் இருந்தால் அது புற்றுநோய் கட்டிகளா




Apple M3 MacBook Pro Launched in India : ஆப்பிள் நிறுவனத்தின் புதிய M3 MacBook Pro-ன்...


ஆரோக்கியமான அத்திப்பழம் Jam.. வீட்டிலேயே செய்வது எப்படி?


12 நாட்களில் 'லியோ' குவித்துள்ள வசூல் இத்தனை கோடியா.?: பாக்ஸ் ஆபிஸில்...


Mrunal Thakur : அவரு வாய்லயிருந்தே வந்துடிச்சி.. அப்போ கண்டிப்பா நம்ம...


Citroen C3 Aircross காருக்கு 1 லட்சம் ரூபாய் வரை சலுகைகள்!


A - Z ஊட்டச்சத்தை நிறைவாக கொடுக்கும் சூப்பர் ஹெல்த் ட்ரிங் ரெசிபி.. இப்பவே குடிங்க!


தினம் காலை வெறும் வயித்துல இந்த லவங்கப்பட்டை தண்ணிய...


வடகிழக்கு பருவமழை இப்படி ஏமாத்திருச்சே! நவம்பர் மாதம் எப்படி இருக்கும்? எப்போது...

அல்லது சாதாரண கட்டியா, எப்படி கண்டறிவது என்பதை விளக்குகிறார் புற்றுநோய் சிகிச்சை மருத்துவர் சையத் இஸ்மாயில், சிம்ஸ் மருத்துவமனை.

## மார்பில் புற்றுநோய் கட்டிகள் அறிகுறிகள்?




புற்றுநோய் வந்தால் மார்பில் இந்த மாற்றங்கள்லாம் வரும்... அதை வெச்சே கண்டுபிடிக்கலாம்...



Pradeep antony: பிரதீப் இதை நிறுத்தியே ஆகவேண்டும்..இல்லைனா...


'நீங்க வேணும்னா பாருங்களே'.. இன்னும் 5 நாள்தான்.. பெரிய உலக...


மின் கட்டணத்தில் நவம்பர் முதல் மாற்றம்: அமலுக்கு வரும் தமிழக அரசின்...


PAK vs BAN: 'பாகிஸ்தான் வெற்றி'.. அரையிறுதி வாய்ப்பு எப்படி? 6 புள்ளிகளில்...

# மார்பக புற்றுநோய்க்கும் சாதாரண கட்டிக்கும் என்ன வித்தியாசம்?



மார்பக புற்றுநோய் என்றாலே மார்பகத்தில் கட்டி தான் அறிகுறியாக சொல்லப்படுகிறது. ஆனால் எல்லா கட்டிகளும் கேன்சர் கட்டிகள்

அல்ல. இதில் சாதாரண கட்டிகளும் உண்டு. இது benign breast lump என்று அழைக்கப்படுகிறது. ஆனால் இதை நீங்களே முடிவு செய்து கொள்ள கூடாது. மார்பகத்தில் எந்த கட்டியாக இருந்தாலும் அவற்றை நீங்கள் உணர்ந்தாலோ சுய பரிசோதனையில் கண்டறிந்தாலோ உடனே மருத்துவரை அணுகி என்ன கட்டி என்பதை கண்டறிந்து தேவையெனில் உரிய சிகிச்சை பெற வேண்டும்.

மார்பகத்தில் சாதாரண கட்டியாக இருந்து 4 செமீ மேல் போனால் அதை அறுவை சிகிச்சை மூலம் அகற்றிவிடுவார்கள். கட்டி சிறியதாக இருந்தால் கண் பார்வையில் வைத்திருக்க அறிவுறுத்துவார்கள்.

---

## கேன்சர் கட்டியாக இருந்தால் அறிகுறி எப்படி இருக்கும்?



கேன்சர் கட்டியில் ஆரம்பத்தில் வலியை உண்டு செய்யாது. அதனால் தான் பலரும் இந்த கட்டியை அசாதாரணமாக நினைத்துவிடுகிறார்கள். இந்த வலி எப்போது தொடங்கும் எனில் கட்டி தீவிரமாகி அருகில் இருக்கும் தோல் பகுதி அல்லது எலும்புக்குள் ஊடுருவும் போது வலி அதிகமாக இருக்கும். அதனால் கட்டி வந்த உடன் அது கேன்சர் கட்டி என்று பயப்படாமல் மருத்துவரை

அணுகினால் பரிசோதனைக்கு பிறகு அந்த கட்டியின் தன்மையை கண்டறிந்துவிடுவார்கள்.

## மார்பு காம்பில் திரவம் வழிய என்ன காரணம்?



மார்பு காம்புகளில் சிலருக்கு திரவம் வெளிவரும். நீர் போன்று இருக்கும் இது வந்தாலும் கேன்சராக இருக்க வாய்ப்புண்டு.

சிலருக்கு மார்பு காம்புகளில் இரத்தம் வரும். இது இரண்டு நிலைகளில் வரும். ஒன்று ductal papilloma இரண்டாவது malignant papilloma விலும் வரும்.


சிலருக்கு காம்பு உள்நோக்கி இழுத்துகொள்ளும். பிறக்கும் போது சிலருக்கு காம்பு உள்நோக்கி இருக்கும். ஆனால் திடீரென்று உள் இழுத்தால் அது மார்பக புற்றுநோயாக இருக்கலாம்.

சிலருக்கு அட்வான்ஸ் நிலையில் மார்பக புற்றுநோயில் இருக்கும் தோல் ஆரஞ்சு நிறத்தில் இருக்கும். இது pseudo orange என்று அழைக்கப்படும். தோல் ஆரஞ்சு நிறத்தில் இருந்தாலும் புற்றுநோய் என்று சொல்லலாம்.

சிலருக்கு அக்குளில் நெறிக்கட்டி வரலாம். இது தொற்று காரணத்தினால் வரலாம். அல்லது மார்பக புற்றுநோயால் நெறிக்கட்டிகள் வரலாம்.

---

# மார்பக புற்றுநோயின் வகைகள் என்ன?



ductal carcinoma in situ மற்றொன்று lablar carcinoma in situ என்று அழைக்கப்படும். இது மார்பக புற்றுநோய் அல்ல. புற்றுநோய்க்கு முந்தைய நிலை. இதற்கு சிகிச்சை அளிக்காத போது அவை எதிர்காலத்தில் புற்றுநோய் கட்டிகளாக மாறலாம். புற்றுநோய்கட்டிகள் என்பது

- infiltrating ductal carcinoma
- invasive lobular carcinoma
- inflammatory breast cancer
- male breast cancer

இவையெல்லாம் மார்பக புற்றுநோயை உண்டு செய்யும். இதில் infiltrating ductal carcinoma மற்றும் invasive lobular carcinoma இதில் முதலாவது அதிகமாக 70% வரை உள்ளது. இரண்டாவது 20 முதல் 30% வரை உள்ளது. ஆனால் இவை இரண்டு மார்பகங்களிலும் வரக்கூடியது. இந்நிலையில் இரண்டு மார்பகங்களிலும் அகற்றப்படும். ஆனால் முதலாவது நிலையில் ஒரு மார்பகம் மட்டுமே எடுக்க வேண்டி இருக்கும். அதன் பிறகு உரிய சிகிச்சை செய்யப்படும்.

அறிகுறிகள் எதுவாக இருந்தாலும் மருத்துவரை அணுகி பரிசோதனை செய்து கொள்வது நல்லது.

---

தனலட்சுமி கட்டுரையாளரை பற்றி